மிக விரைவிலே பணியை முடித்து நியாயமான கட்டணங்களை வழங்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

4. மதுராந்தகம் தொகுதி, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் இயங்கச் செய்ததற்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த சப்ஜெக்டா, இல்லையா? வேறு என்ன? (குறுக்கீடுகள்) இந்த சப்ஜெக்ட் முடிந்துவிட்டது. வேறு என்ன சொல்லுங்கள். டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.*

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி சூரிய ஒளியை அளவிட முடியாதோ அதுபோல, தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் மக்கள் பணியையும் அளவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) 2006 ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் அவர்கள் தமிழக மக்களுக்கு என்னவெல்லாம் வாக்குறுதிகள் தந்தாரோ அத்தனை வாக்குறுதிகளையும் 100-க்கு 100 சதவீதம் நிறைவேற்றியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.*

அதுபோல, மதுராந்தகம் தொகுதியில் தேர்தல் நேரத்தில், (குறுக்கீடுகள்) நான் சொன்னதையும்...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *Zero hour இன்னும் முடியவில்லை. உட்காருங்கள்.*

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *அதாவது, நான் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவி ஏற்றார். என்னுடைய தொகுதியில் மூடிக்கிடக்கும் படாளம் சர்க்கரை ஆலை மீண்டும் திறக்கப்படும் என்ற அந்த வாக்குறுதியை இன்றையதினம் பரந்த மனதுடன், விசால உள்ளத்துடன், அவர் நிறைவேற்றித் தந்துள்ளார் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்) 10 ஆண்டுகளாக மூடிக்கிடந்த இந்த ஆலை, இதில் பாதிக்கப்பட்டது. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர்கள் நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஏன் அதில் தலையிட்டுக்கொண்டிருக்கிறீர்கள்? நன்றி சொல்லி பேசுவது தவறா? நன்றியோடு பேசுகிறார்கள். உட்காருங்கள்.*

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் இந்த ஆலையை அவர்கள் ஆட்சியில் மூடினார்கள். இந்த ஆலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்டது ஓரிருவர் அல்ல. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அப்படி மூடிக்கிடந்த இந்த ஆலையை எல்லோரும் கைவிட்டு, இனி இந்த ஆலையைத் திறக்கவே முடியாது என்று மரண சாசனம் எழுதினார்கள். ஆனால், பூட்டிய பெட்டிகளை மீண்டும் திறந்து, கோப்புகளை தூசி தட் டி, மீண்டும் அந்தக் கோப்புகளுக்கு உயிர் தந்து, நிபுணர்களின் சாத்தியம் இல்லை என்ற அறிக்கையை தூர வைத்துவிட்டு, நிபுணர்களை அழைத்து இதை எப்படியாவது சாத்தியமாக்கித் தாருங்கள் என்று கட்டளையிட்டு, எப்படி மூன்று தினங்கள் கழித்து கல்லறையிலிருந்து ஏசுபிரான் திடீரென்று உயிருடன் திரும்பி வந்தாரோ, அதைப்போல இன்றையதினம் படாளம் சர்க்கரை ஆலைக்கு உயிரைத் தந்து, உயிர்ப்பித்துத் தந்த, வாழ்கின்றபோதே வரலாறாக மாறியிருக்கும் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து மிகச் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றியையும் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 9(1)—ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் பதினான்காவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்.*